காரைநகர் பிரதேச சபை
---
யாழ்ப்பாண மாவட்டம்
---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 12 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 10 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய காரைநகர் பிரதேச சபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி காரைநகர் பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 15,725,673 | - | - |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 397,966 | 01 | 78,510 |

-

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14இ236இ343 பெறுமதியுடைய 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 566,913 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 16,010,971 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு
---------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 3,167,756 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 2இ414இ598 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்
--------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்
-----------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டுத | உள்ளபடியான து | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 41 | 43 | |
| குத்தகை வாடகைகள் | 312 | 242 | |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 208 | 160 | |
| வேறு வருமானங்கள் | 16,651 | 13,599 | 2,806 |
| | 17,212 | 14,044 | 2,806 |

2.3.2 வருமான பாதிப்பு

-------------------------

சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்கள் தொடர்பாக ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்படாமையால் சபையின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.3 நீதிமன்ற தண்டப்பணம்

------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய 2011 யூலை தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதி மற்றும் 2012ம் ஆண்டுக்குரிய நீதிமன்றக் குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் முறையே ரூபா 204இ833 மற்றும் ரூபா 796இ500 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4. முத்திரைத் தீர்வைக் கட்டணம்

--------------------------------------------------

(i) 2012 ஜனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்படவேண்டிய முத்திரைத்தீர்வைக் கட்டணம் ரூபா 1,801,605 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 யூலை தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணப் பட்டியல் காணப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

-------------------------------------------------------

2.4.1 பெறப்படவேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

புறநெகும மூலதன மானிய மீளளிப்புக்கென சபை நிதியில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 10,000,000 பெறுமதியான முற்பணம் அறிக்கையிடும் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.4.2 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2009ம் ஆண்டு வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,500 பெறுமதியான மின்சார வைப்பு அறிக்கையிடும் திகதி வரை அசைவற்ற நடைமுறைச் சொத்தாகக் காணப்படுகின்றது.

2.4.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

கணிப்பீட்டுச்சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 24,170,178 ஆக இருந்தது.

விபரம் வருமாறு:

| விபரம் | தொகை<br>ரூபா |
| --- | --- |
| நிலையான சொத்துக்கள் | 21,364,251 |
| களஞ்சியப் பொருட்கள் | 2,805,927 |
| | 24,170,178 |

2.4.4 வாகனப்பாவனை

சபையின் பாவனையிலுள்ள 08 வாகனங்களுக்கு வாகன வரி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு :

| வாகன விபரம் | எண்ணிக்கை |
| --- | --- |
| நான்கு சில்லு உழவியந்திரம் | 02 |
| நான்கு சில்லு உழவியந்திரப்பெட்டி | 01 |
| இரண்டு சில்லு உழவியந்திரம் | 01 |
| இரண்டு சில்லு உழவியந்திரப்பெட்டி | 01 |
| நான்கு சில்லு உழவியந்திர நீர்த்தாங்கி | 03 |
| | 08 |

---

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப் பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் ஐஐ பிரிவு 4 | சபையினால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் வீதவரி அறவீடு சபையினால் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் முத்திரைத் தீர்வை, தண்டப் பணங்களின் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 10,530,000 முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை | |
| அத்தியாயம் ஓ பிரிவு 7.2 | மாதாந்தம் 80 மணித்தியாலப்படி நடைமுறையாண்டில் ரூபா 89,465 மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு அமைச்சரின் அல்லது அமைச்சின் செயலாளரின் அதிகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2012 ஜனவரி 20ம் திகதிய 12.:.2000 அரசாங்க நிர்வாகச் | தொழில் நுட்பக் கல்லூரி பயிலுநர்களுக்கு நடைமுறையாண்டில் ரூபா 90,400 பயிலுநர் படிக் |

சுற்றறிக்கை கொடுப்பனவு குறைத்து வழங்கப்பட்டுள்ளது.

2.6 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

-----------------------------------------------------------------

(i) சபையினால் செலுத்தப்பட வேண்டுமென சில்லறைக்கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட தலைமை அலுவலக கட்டிட அமைப்பு மற்றும் சனசமூக நிலைய நன்கொடை ரூபா 82,494 ஒதுக்கம் கடந்த ஐந்து வருடத்திற்கு மேலாக செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நடைமுறையாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட மூலதன வேலைகளுக்குரிய கொடுப்பனவுகள் ரூபா 5,288,478 செலுத்தப்பட வேண்டுமென சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் அறிக்கையிடும் திகதிவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு :

| <u>மூலதன வேலையின் விபரம்</u> | <u>ஏற்பாட்டின் தொகை (ரூபா)</u> |
|---|---|
| பொதுக் குழாய்க் கிணறு அமைத்தல் - ீளுனுபு | 952,000 |
| கோவளம் மருதபுரம் வீதி புனரமைப்பு – புறநெகும | 4,336,478 |
| | 5,288,478 |

(iii) நடைமுறையாண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 149,839 பெறுமதியான பிடி பணம் மற்றும் சுற்று சூழல் வரி அறிக்கையிடும் திகதிவரை குறித்த நபர்களுக்கும் செலுத்தப்படடிருக்கவில்லை.

2.7 முற்றாகக் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------------------------

நடைமுறையாண்டில் நிறைவேற்றவென பாதிடப்பட்ட ரூபா 84,340,000 பெறுமதியான ஏழு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு :

| <u>செயற்திட்ட விபரம்</u> | <u>நிதியளிப்பு</u> | <u>பாதிடப்பட்ட தொகை (ரூபா)</u> |
|---|---|---|
| தோப்புக்காடு வைரவர் கோவில் வீதி புனரமைப்பு | நேடுளுஜீ | 20,000,000 |
| வேம்படி வீதி புனரமைப்பு | நேடுளுஜீ | 15,000,000 |
| கசூரினா சுற்றுலா மையம் புனரமைப்பு | நேடுளுஜீ | 6,340,000 |
| தலைமையலுவலகக் கட்டிடம் அமைத்தல் | ஊடீபு | 10,000,000 |
| கடைத் தொகுதி அமைத்தல் | ஊடீபு | 10,000,000 |
| மணற்காடு கோவில் வீதி புனரமைப்பு | ீளுனுபு | 18,000,000 |
| வீரகுளம் ஆலடி கேசடி வீதி புனரமைப்பு | ீளுனுபு | 5,000,000 |
| | | 84,340,000 |

.2.8 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள், கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

1. வருமானசேகரிப்பு
2. நிலையான சொத்துக்கள்
3. கைகணக்கீடு
4. வாகனங்களின் பயன்பாடு
5. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு